[1971 ஜூலை 28

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) பணியாளர்களுக்கு ஊதியங்களை மாற்றியமைத்தல் குறித்து, 1947-ம் ஆண்டு தொழில் தகராறுகள் சட்டத்தின் 18 (1) பிரிவின்கீழ் 18—8—69-ஆம் நாளிட்ட உடன்பாடு ஒன்று ஏற்பட்டது. அவ்வுடன்பாட்டில் பூரிப்பூதியம் குறித்து வகை எதும் செய்யப் படவில்லை. இவ்வுடன்பாடு செயல்படுத்தப்படவில்லை.

(இ) தலைவர், தங்களது இசைவு இன்றிச் செயல்பட்டுவிட்டார் எனக் காரணங்காட்டி, இயக்குநர் குழு இவ்வுடன்பாட்டில் கையெழுத்திட்டு உறுதி செய்யவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, 18—8—1969 அன்று ஏற்பட்ட உடன்பாடு சட்டரீதியான உடன்பாடுதானா? அதன் ஷரத்துக்கள் என்னென்ன? என்னென்ன பகுதிகள் அமுலாக்கப் பட்டிருக்கிறது, என்னென்ன பகுதிகள் அமுலாக்கப்படவில்லை என்பதையும் அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஊதிய உயர்வு பற்றிய உடன்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

Illicit drinks seized in Madras.

* 493 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) whether a large quantity of illicit drinks was seized from Harbour area and Choolaimedu in Madras City about the 10th October 1970; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) & (இ) 1970-ம் ஆண்டு அக்டோபர் 10-ம் நாள் துறைமுகப்பகுதியிலோ அல்லது சூளைமேட்டிலோ கள்ளச்சாராயம் எதுவும் கைப்பற்றப் படவில்லை. இருப்பினும், 9—10—70 அன்று காலையில் துறைமுக இன்ஸ்பெக்டரும், அவருடைய காவல்படையும் எம்.டி.ஒய். 7559 எண்ணுள்ள காரை இராயபுரம் இருப்புப்பாதை சாலைக்கடவில் இடைமறித்து காரின் பின் பகுதியில் 4 கோணிகளில் மறைத்து வைக்கப் பட்டிருந்த 115 ஜானிவாக்கர், ரெட் லேபிள், ஸ்காட்ச் விஸ்கி புட்டிகளைக் கைப்பற்றினார்கள் என்று காவல் துறை கமிஷனர் தெரிவித்துள்ளார்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவர் அவர்களே, கள்ளச்சாராயம் மலிந்த இந்தக் காலத்தில், கள்ளுக்கடையை எதிர்த்து காந்தியாக மாறப்பார்க்கிறார்களோ, அதைப் பற்றி அரசு என்ன கருதுகிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அதைப் பற்றி அரசு எதுவும் கருதவில்லை (சிரிப்பு).

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், வெளிநாட்டுச்சாராயம் இவை என்று தெரிகிறது. அப்படியானால், இது லைசென்ஸ் பெற்று இந்தமாதிரிக் கொண்டு வந்தார்களா அல்லது எப்படிக் கொண்டு வந்தார்கள்?

1971 ஜூலை 28]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: லைசென்ஸ் எதுவும் இல்லாததால்தான் அவர்கள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். காரிலே சென்ற மணிதேசு, விநாயகம், வர்கீஸ் என்ற மூன்று பேர்கள்மீது வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, மதுவிலக்கு ரத்து ஆனதால், வழக்கு மன்றத்திலே இருக்கும் வழக்குகள் திரும்பப் பெறப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஏற்கனவே சாட்டப்பட்ட குற்றங்கள் மீது போடப்பட்ட வழக்குகள் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கும்.

திரு. எம். ஏ. லத்திப்: தலைவர் அவர்களே, இவ்வாறு கள்ளச்சாராயம் பிடிக்கப்பட்டால் அது பயன்படுத்தப்படுகிறதா? விற்பனை செய்யப்படுகிறதா அல்லது அழிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: வழக்கு விசாரணையில் தீர்ப்பு வழங்கப்பட்டபிறகு, பெரும்பாலும் இவை அழிக்கப்படுகின்றன.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, வெளி நாட்டுச்சாராயம் கொண்டு வரும்போது, பலவிடங்களில் 'செக்' செய்கிறார்களே, அப்படி இருக்கும்போது 100, 115 பாட்டில்கள் எப்படி வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவைகள் ஒன்றும் கால், கை முளைத்து வந்துவிடவில்லை, காரிலேதான் வந்தன.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, வெளிநாட்டு கள்ளப் பொருள்கள் அங்கே உள்ள கூட்டுறவுப் பண்டகசாலைகளில் விற்பனை செய்யப்படுகிறது. இம்மாதிரியான மதுபானங்களை நீண்டநாட்கள் கழித்து, அழித்துவிடுவது என்ற உத்தரவு அளித்து, அதற்குப் பிறகு அழிப்பதற்குப் பதிலாக, கூடியவிரைவில் இப்படிப்பட்ட மதுக்களை விற்பனை செய்ய ஆலோசனை செய்து, லைசென்ஸ் பெற்றவர்கள் மூலம் விற்பனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இந்தச் சங்கடமெல்லாம் இன்னும் ஒரு மாதத்திற்குத்தான்.

திரு. சொ. காவேரிமணியம்: இவ்வாறு கள்ளச்சாராயத்தைக் கொண்டு சென்ற வாகனமான கார் கைப்பற்றப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கார் கைப்பற்றப்பட்டுத்தான், அவர்களெல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

Seizure of 'Illustrated Weekly of India'

*494 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the copies of the "Illustrated Weekly of India" were seized by the police about February—March, 1971; and

(*b*) if so, the details thereof?